# மொறட்டுவை பல்கலைக்கழகம்

# வெற்றிடங்கள்

பொருத்தமான தகுதிபெற்ற நபர்களிடம் இருந்து கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக மொறட்டுவை பல்கலைக்கழகம் விண்ணப்பங்களை கோருகிறது.

**01. முகாமைத்துவ உதவியாளர் பதவி தரம் III**

1) **தகைமைகள்:**

1. க.பொ.த. (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்களில் திறமை சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்:-

i. சிங்கள மொழி/ தமிழ் மொழி

ii. ஆங்கில மொழி/ ஆங்கில இலக்கியம்

iii. கணிதம்

**மற்றும்**

2) க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் (பொது ஆங்கிலம் தவிர்த்து) அனைத்து பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருப்பது இந்த நோக்கத்திற்கு போதுமானது)

3) பின்வருவனவற்றை பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்;

a) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட ஆறு (06) மாத காலத்திற்கு குறையாத கணினி பயன்பாடுகளில் அங்கீகரிக்க முடியுமான தகைமை ஒன்று.

**மற்றும்**

b) கணினி பயன்பாட்டு பொதிகளை பயன்படுத்தியதில் இரண்டு ஆண்டுகள் அனுபவம்.

**02. குறிப்பு**: தகைமைக்கு

a) இலங்கை பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.

b) விண்ணப்ப இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

c) சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

**03. **சம்பள அளவு: U-MN I (III) ரூபா 49,475-17x540-58,655 (மாதாந்தம்)**

06/2025 முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் மற்றும் 02/2025 (i) ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

**04. தேர்வு முறை:** எழுத்துமூல பரீட்சை (75% புள்ளிகள்) மற்றும் நேர்முகப் பரீட்சை ஒன்று (25% புள்ளிகள்)

- சிங்களம்/ தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவு
- நுண்ணறிவு மற்றும் பொது அறிவு சோதனை
- கணினி அறிவு

**02. வேலைகள் உதவியாளர் பதவி (தரம் III)**

1) **தகைமைகள்:** க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது குறைந்தது இரண்டு (02) திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்

2) **வயது:** 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3) **மற்றது**:

(i) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) பதவிக்குரிய பணிகளை மேற்கொள்வதற்கும் நாட்டில் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

4) ****சம்பள அளவு**: U-PL I (III) ரூபா 42,775-16x450-49x975 (மாதாந்தம்)

06/2025 முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் மற்றும் 02/2025 (i) ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

5) **தேர்வு முறை:** வர்த்தக சோதனை மற்றும்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

** தேர்வு செய்யப்படும் அபேட்சகர்/ களுக்கு அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக, வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மற்றும் மற்ற அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் உறுதி செய்யப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2025.05.09 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு உதவிப் பதிவாளர், நிறுவனங்கள் (கல்வி சாரா) மொறட்டுவை பல்கலைக்கழகம், மொறட்டுவை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்புகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பங்களை மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் https://uom.lk/vacancies. என்ற இணையதளம் மூலம் தரவிறக்கம் செய்ய முடியும்.

உயர் கல்வி நிறுவனங்கள், அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனம் மற்றும் சட்டரீதியான சபைகளில் தற்போது பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த திணைக்கள தலைவர் மூலம் அனுப்புவதற்கு வகை செய்தல் வேண்டும்.

மேலுள்ளவாறு குறித்த திணைக்கள தலைவர் மூலம் அனுப்பப்படாத, தாமதித்து கிடைக்கும், தேவையான விபரங்கள் குறிப்பிடாத, தெளிவற்ற அல்லது வேறு தேவை ஒன்றை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்,**
**மொறட்டுவை பல்கலைக்கழகம்,**
**மொறட்டுவை.**

2025.04.20